விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 134 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (02.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


க.பொ.த சாதாரண தர
மாணவர்களுக்கான

சப்ரகமுவ மாகாண
கல்வித்
திணைக்களத்தின்
பரீட்சை
வினாத்தாள்

உள்ளே



## அல்லைப்பிட்டியில் கோர விபத்து;
## இரு பெண்கள் உயிரிழப்பு






15

# இனப் பிரச்சினைக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



- தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பு.
- புதிய அரசியலமைப்பு மூலம் இனப் பிரச்சினை தீர்க்கப்படும்.
- அனைத்து சமூகத்தையும் உள்ளடக்கி பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இதில் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு
## 8 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 8 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகம் ஊடாக செல்கின்ற அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இடத்துக்குள் சிலர் அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்துள்ளனர்.

இதன்போது, குறித்த சந்தேகநபர்கள் மீது பாதுகாப்புப் படை

15

### மக்களுக்காக அதிகாரத்தை விட்டுக்கொடுத்தோம்



## பலமிக்க சக்தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பொய்யான விமர்சனங்கள் எழுந்தபோது மக்களுக்காக அதிகாரத்தை விட்டுக் கொடுத்தோம். மக்கள் தற்போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தேவையாயின் பலமிக்க சக்தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம் என முன்னாள் ஜனாதிபதி

15

## உழைக்கும் மக்களின் உரிமை பாதுகாக்கப்படும்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

மே தினத்துக்கு பின்னர் புதிய இலக்கு நோக்கி அனைவரும் செயற்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என

15

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்யக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாக வளிமண்டல [illegible]

15

## பயங்கரவாதச் தடைச்சட்டம் நீக்கப்படாவிட்டால்

### போராட்டங்கள் தொடரும்

(கொழும்பு)

பயங்கரவாத தடை சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத தடை சட்டமூலம் என்பனவற்றை முற்றாக நீக்க தவறும் பட்சத்தில் மக்கள் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் புத்தர்சிலையை சேதப்படுத்தியவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள புத்தர் சிலை ஒன்றினை சேதப்படுத்திய சந்தேகத்தில் ஒருவரை கொக்கிளாய் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கொக்குளாய் மேற்கு கிராம அலுவலகர் பிரிவில் உள்ள முகத்துவாரம் பகுதியில் பெரும்பான்மை மக்களால் வணங்கப்பட்டு வந்த புத்தர் கோவில் ஒன்றில் இருந்த புத்தர் சிலை ஒன்று உடைக்கப்பட்டுள்ளதாக கொக்குளாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

1.5அடி உயரம் கொண்ட புத்தர் சிலை உடைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நீர் கொழும்பு உடப்பு பகுதியினை சேர்ந்த 33 அகவையுடைய ஒருவர் கொக்குளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீன்பிடி தொழிலுக்காக கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் வந்திருந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணையினை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km

**பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை** (15435)

**076 755 8606 ,077 638 5683**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**
**தரகர் தேவையில்லை** (15432)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை** (15432)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 814 7389, 077 986 5457**


# ரணில் எவரையும் பழிவாங்கவில்லை

## அகிலவிராஜ் காரியவசம்

(கொழும்பு)

பல அவதூறு பிரசாரங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தை மேற்கொண்டார், அவர் யாரையும் பழிவாங்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் படிப்படியாக முன்னோக்கிக் கொண்டு செல்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் இக்கட்டான நேரத்தில் மே தினத்தைக் கொண்டாடியது. 1956 தேர்தலில் தோல்வியடைந்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் சவப்பெட்டியில் ஆணி அடிக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. 1970 இல் ஐக்கிய தேசியக் கட்சி புதைக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

1988 இல் ஜே.வி.பி யினர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க முயன்றனர். 1993 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் எமது முன்னாள் தலைவர்களை வெடிகுண்டுகளால் அழிக்க முயன்றனர்.

2020 இல் கட்சியை இரண்டாகப் பிரித்து ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க முயன்றனர். ஆனால், இன்று ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளது. இறுதியில் எங்கள் கட்சியின் தலைவர் நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளார்.

இந்த நாடு வீழ்ச்சியடைந்த போது ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாரும் அந்தச் சவாலை ஏற்க முன்வரவில்லை. இன்று அவர் இந்த நாட்டைப் படிப்படியாக முன்னோக்கிக் கொண்டு செல்கின்றார்.

பல அவதூறு பிரசாரங்களுக்கு மத்தியில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார். யாரையும் பழிவாங்கவில்லை என தெரிவித்துள்ளார். (ம-7,9)

# எதிர் காலத்தில் இலங்கையில் பெண் பொலிஸ்மா அதிபர்கள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பெண் பொலிஸ்மா அதிபர்களின் கீழ் பணியாற்ற பொலிஸார் தயாராக வேண்டும் என பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

லசந்த அழகியவன்ன தலைமையில் இந்தக் குழு கூடியது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், பொலிஸார் அன்றையதினம் கணக்குக் குழுவுக்கு வரவழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## பயங்கரவாத...

நிணைந்து அரசாங்கத்துக்கு இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளனர்.

இதுதவிர இந்த விடயம் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தாகியுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கடந்த 1979ஆம் ஆண்டில் தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்ட பயங்கரவாத தடை சட்டம் மக்களை எந்த வகையிலும் பாதுகாக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக பொதுமக்களை ஒடுக்குவதற்காக மாத்திரமே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இந்த சட்டம் ஜனநாயகத்துக்கு விரோத அடக்குமுறை சட்டமாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வெளியிட்டுள்ள குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7,9)


## கார் / வான் வாடகைக்கு

**கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்** (15434)

**077 898 9691**

PIXCELMATE board Optoma

கற்பித்தல் எளிதாக்கப்பட்டது




Interactive Whiteboard I Multimedia Projector
Comprehensive company warranty & after sales service

Rs.345,000 Upwards (Excludes installation and transportation charges) | LIMITED OFFER

பிரத்தியேகமாக வடக்கில்

Call us now! 076 804 6238

(C-6466)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணியற்ற ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு விரைவில் காணி

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா

**(கொழும்பு)**

**வட மாகாணத்தில் காணி அற்ற, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் காணி அற்ற வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கான நன்கொடைக் காணிகள் வழங்கும் செயற்பாடுகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. அதே போன்று காணி அற்ற அரச உத்தியோகத்தர்களுக்கும் குத்தகைக்கு மற்றும் வீடுகளை கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயற்றிட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மாகாணத்தில் சுமார் 4 இலட்சம் மரங்கள் ஒவ்வொன்றிற்கும் 1:5 என்ற விகிதத்தில் மரங்களை நாட்டுவதற்கு புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது வழங்கப்படும் காணி துண்டுகளில் ஏற்கனவே உள்ள பயன் தரும் மரங்கள் அல்லது காணி துண்டுகளில் நடுகை செய்யும் பயன்தரும் மரங்களுக்கான இலவச ஆலோசனைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

குறித்த திட்டத்தினை செயற்படுத்துவதற்காக மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் 10 பேர்ச் அரச காணிக்கு உரிமையாளராக மாறுகின்ற நிலையில் அவர்களுக்கான பயன் தரும் மரங்களை அவர்களே அறுவடை செய்யும் உரிமம் வழங்கப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

## பாடசாலை வாகன சேவை கட்டணத்தை குறைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருள் விலை குறைப்புக் காரணமாக பாடசாலை வாகன சேவைக் கட்டணத்தையும் குறைக்கவுள்ளதாக அகில இலங்கை பாடசாலை வாகன ஓட்டுநர்கள் சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா தெரிவித்துள்ளார்.

டீசல் விலைகள் மொத்தமாக குறைக்கப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு, பாடசாலை வாகன சேவை மாதாந்தக் கட்டணத்தை திருத்தியமைக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கட்டணத் தொகையை மீளாய்வு செய்வது குறித்த தீர்மானம் குழுக் கூட்டத்தின் பின்னர் எடுக்கப்படும் என அவர் தெரிவித் தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பெற்றோர்கள் சோர்ந்து போயுள்ளதால், சமீபத்திய எரிபொருள் விலைக் குறைப்பின் பலனை நாங்கள் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் 30 ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு



(கொழும்பு)

இலங்கையின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 30 ஆவ்து சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஹேமா பிரேமதாஸ, சஜித் பிரேமதாஸ, திருமதி. சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உருவச் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (நி)

## ஆட்டோ கட்டணங்களை குறைக்க முடியாது

(கொழும்பு)

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்க முடியாது என முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள போதும் முச்சக்கர வண்டிக் கட்டணத்தில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என தேசிய ஒன்றிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் கைத்தொழில் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

## நாட்டில் மேலும் 7 பேருக்கு கொவிட்

(கொழும்பு)

புதிதாக 7 பேர் கொவிட் தொற்றாளர்களாக நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 672171 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை 5 பேர் கொவிட் தொற்றாளர்களாக சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## தீர்வை வரிச் சலுகை அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு பணியாளர்களுக்கு விமான நிலையங்களில் வழங்கப்படும் தீர்வை வரிச் சலுகை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கட்டங்களின் கீழ் இந்த வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படுவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

2400 முதல் 4799 டொலர் வரை அனுப்பும் வெளிநாட்டு பணியாளர்களுக்கு 600 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகையும் 4800 முதல் 7199 டொலர் வரை அனுப்பிவைப்போருக்கு 960 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. (நி)

## எரிவாயுவின் விலையும் விரைவில் குறையும்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை இன்னும் சில தினங்களில் குறையும் என ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் 70 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக குறைந்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் அதை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வர முயற்சிக்கிறோம்.

அத்துடன் "எண்ணெய் விலை குறைந்துள்ளதால், அடுத்த சில நாட்களில் எரிவாயுவின் விலையும் குறையும் என நம்புகிறோம் என அவர் தெரிவித்தார். (நி)

### வெசாக் தினத்தை முன்னிட்டு

## மூன்று நாட்களுக்கு இறைச்சிக் கடைகள் பூட்டு

(கொழும்பு)

வெசாக் வாரத்தை முன்னிட்டு நாடு முழுவதும் இறைச்சி மற்றும் மீன் கடைகள் மூன்று நாட்களுக்கு மூடப்படவுள்ளன.

அதன்படி, மே 5, 6, 7 ஆகிய திகதிகளில் இறைச்சி மற்றும் மீன் கடைகள் மூடப்படவுள்ளன.

இதற்கிடையில், குறித்த மூன்று நாட்களில் நாடு முழுவதும் உள்ள மதுபான சாலைகளை மூடவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சட்ட சிக்கலை தீர்த்தால் தேர்தலை நடத்தலாம்

### தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடலுக்காக நிதி அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரையில் எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

எவ்வாறிருப்பினும் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை தாம் இன்னும் கைவிடவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்தோடு மாகாணசபைகள் தொடர்பில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு பாராளுமன்றத்தினூடாக தீர்வு வழங்கப்பட்டால் அந்தத் தேர்தலையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து எந்தவொரு முன்னேற்றமும் தென்படாமலுள்ளமை தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

## வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது சாவகச்சேரி இந்துக் கல்லூரி




தென்மராட்சிக் கல்வி வலய மானது தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்த தென்ம ராட்சியின் முன்னணிப் பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி மற்றும் சதுரங்கப் போட்டி ஆகியவன்றின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றன.


தென்மராட்சி வ்லயக் கல்விப்பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கலந்து சிறப்பித்திருந்தார். கடினப்பந்து துடுப்பாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் சாவக்ச் சேரி இந்துக் கல்லூரி மற்றும் சாவ கச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகிய அணிகள் மோதின.

13பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேர்க் அணி சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டினை மாத் திரம் இழந்து 86ஓட்டங்களை பெற்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் மறைந்த.உறுப்பினர் யோ.ஜெயக்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண் ணத்தை சுவீகரித்துக் கொண்டது.இதன்போது கடினப்பந்து போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசு மற்றும் வெற்றிக் கோப்பை ஆகியனவும் இரண்டாம் இடத்தை பெற்றடிறிபேர்க் கல்லூரி அணிக்கு 75 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும், மூன்றாம் இடத்தைப் பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணப்பரி சிலும் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் சதுரங்க போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கும் வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப் பரிசில் ஆகியன வழங்கி வைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# சென்னையை வீழ்த்திய பஞ்சாப்



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்று முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்கள் குவித்தது. அபாரமாக ஆடிய துவக்க வீரர் தேவன் கான்வே 52 பந்துகளில் 16 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 92 ஓட்டங்கள் விளாசினார்.

இதையடுத்து 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணியின் கப்டன் ஷிகர் தவான் 28 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மற்றொரு துவக்க வீரர் பிரப்சிம்ரன் சிங் அதிர டியாக ஆடி 42 ஓட்டங்கள் விளாசி நம்பிக்கை அளித்தார். அதர்வா 13 ஓட்டங்களில் விக்கெட்டை இழந் தார்.

அதன்பின் லியாம் லிவிங் ஸ்டோன்- சாம் கர்ரன் ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் அணியின் ஸ்கோர் உயர்ந்தது.

கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், ஆட்டம் பரபரப்பின் உச்சத்திற்கு சென்றது.

இதில் 4 விக்கெட்டுகள் வித் தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ்த்ரில் வெற்றி பெற்றது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2821

**யஸ்மிகா**

Me: கடவுளே என் வாழ்க்கைல இப்போ தான் ஒளி தெரியுற மாதரி இருக்கு என்ன இப்படியே கூட்டிட்டு போய் ஒரு நல்ல இடத்தில விட்டுடு.. கடவுள்: என்னது ஒளியா??? ப்பூ...



**வைசாலி**


ஹோட்டல்ல சாப்பிட்டு முடிஞ்சதும் சர்வர் டிப்ஸ் கேட்டாரு..



வெந்தயம் போட்டால் இட்லி மிருதுவாக இருக்கும்னு டிப்ஸ் கொடுத்தேன்.. பயபுள்ள முறைக்குது...

**சுபராஜ்**

தோழா தோழா தோள் கொடு கொஞ்சம் சாஞ்சுக்கனும்...




இந்த தோல் போதுமா தோழி சாஞ்சிக்க...

**கயரூபன்**

மச்சான் வெயில் அதிகமா இருக்குன்னு சொன்னால்ல... வெளில வந்து பாரு மச்சான் உனக்காக என்ன கொண்டு வந்திருக்கேன்னு...



**நிசாந்தன்**

பேச ஆரம்பிக்கும் போது பேசு பேசு பேசிக்காட்டுனு உயிர வாங்க வேண்டியது.



நல்லா பேச்சு வந்ததும் லொடலொடனு பேசாத வாய மூடுனு சொல்றது. என்ன பாத்தா எப்படி இருக்கு எல்லார்க்கும்?

**விமேஸ்**

தமிழின் சிறப்பான 3 ல, ழ,ள எழுத்துக்கள் பயன்படும் ஒரே சொல்...



"தொழிலாளி"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய விமானப்படை பிரதானி இலங்கை வந்தடைந்தார்



(யாழ்ப்பாணம்)

இந்திய விமானப் படை பிரதானி ஏர் சீஃப் மார்ஷல் சவுத்ரி உத்தியோகபூர்வ பயணமாக இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இந்திய விமானப் படை பிரதானி 4 நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை ஏர் சீஃப் மார்ஷல் சவுத்ரி சந்திக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# குவைத்தில் இடம்பெற்ற விபத்தில் இலங்கைப் பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

குவைத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் குவைத்தை தளமாகக் கொண்டியங்கும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் இலங்கையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார். குவைத் பிரஜையான 21 வயதுடைய இளைஞன் ஒருவர், கவனகுறைவான முறையில் வாகனத்தை செலுத்திய நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்தை ஏற்படுத்திய இளைஞன் தைமா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் முகவரியற்று காணாமல் போய்விடும்

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்காலத்தில் முகவரியற்று காணாமல் போய் விடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கட்சிகள் உருவாகலாம். இலங்கை வரலாற்றில் அவ்வாறு உருவாகியும் உள்ளன. எனினும், அவை நிலைப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதே கதிதான் ஏற்படும்.

நாட்டின் நலன் கருதி செயற்பட்ட பௌசிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதாவது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தமது கட்சி எதிர்ப்பு என்பதையே அக்கட்சி இதன் மூலம் கூற விளைகின்றது.

தமது அணி சந்தர்ப்பவாத அரசியலையே நடத்துகின்றது என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை ஐக்கிய மக்கள் சக்தி தவிர்த்தது என குறிப்பிட்டார். (4)



சாவகச்சேரி இந்துக் கல்லூரிப் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்துத் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது. (படம்- சுபேசன்)

# கொழும்பில் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பாரிய பேரணி

(கொழும்பு)

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் கொழும்பில் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பாரிய பேரணி ஒன்றை முன்னடுத்துள்ளன.

தொழிற் சங்கங்களும் மனித உரிமை அமைப்புகளும் மலையக அமைப்புகளும் பொதுமக்களும் இணைந்து இந்த பேரணியை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மாளிகாவத்தை மைதானம் வரையில் இந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

அதிகளவான மக்கள் தாங்களாகவே பேருந்துகளில் வந்து இந்த பேரணியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)



பளு தூக்கல் போட்டிகள் மூலம் சர்வதேச ரீதியாக தென்மராட்சி மண்ணிற்கு பெருமைகளைத் தேடித்தந்த ச.புசாந்தனை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி-பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

# இராசிபலன்

02.05.2023
சித்திரை 19, செவ்வாய்க்கிழமை
துவாதசி முற்பகல் முன்னிரவு 11.01 மணிவரை
உத்தரம் முன்னிரவு 2.27 மணிவரை

சுபநேரம் -10.27-11.57 மணிவரை
இராகுகாலம்-2.57-4.27 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்- அவிட்டம்,சதயம்

வளவன்

**மேஷம்:** மற்றவர்களின் மனநிலையைஅறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும்அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**ரிஷபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், காலைப் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்,நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில்குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புகழ் பெற்றவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**கும்பம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர்கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின்சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்.

ஒருமுறை ஏமாறுவது தவறல்ல. மறுமுறையும் ஏமாறுவது பெருந்தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மணல் கடத்தல்

# துப்பாக்கிச் சூடு நடத்தி டிப்பர் மடக்கிப் பிடிப்பு



(கரணவாய்)

விசேட அதிரடிப் படையி னரிடமிருந்து தப்பிச்செல்ல முற்பட்ட சட்டவிரோத மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் ஒன்றை துப்பாக்கி சூடு நடத்தி அதை மீட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில், விஷேட அதிர டிப்படையினரால் ஒப்படைக் கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கு, குடத் தனை வலிகண்டிப் பகுதியூடாக கஞ்சா கடத்தப்படுவதாக விசேட அதிரடி படையினருக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணி அளவில் விசேட அதிரடிப்படையினர் விசேட வீதி தடுப்பு ஏற்படுத்தி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தனர்.

அச்சமயம் அவ் வீதி ஊடாக பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றை மறித்தபோது டிப்பர் வாகனத்தை செலுத்தி வந்தவர் விசேட அதிரடிப்படையினர் மீது மோத முற்பட்ட சமயம் விசேட அதிரடிப்படையின் ஒருவர் காய மடைந்த நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அதி ரடிப்படையினர் சக்கரத்திற்கு துப்பாக்கி சூடு நடத்தி டிப்பர் வாகனத்தை கைப்பற்றினர். டிப்பர் வாகனத்தில் இருந்த இருவர் தப்பிச்சென்ற நிலை யில் ஒருவர் கைது செய்யப்பட்டு உள்ளார். கைது செய்யப்பட்ட வரும் மீட்கப்பட்ட டிப்பர் வாக னமும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப் பட்டுள்ளது. (4-6-60)

# கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 10 லீற்றர் கசிப் புடன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸா ருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறி த்த கைது நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கசிப் பினை எடுத்துச்சென்ற புத்தூர் பகுதி யினைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பி டத்தக் கது. (4-6-30)

# கடலில் மீன்கள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

சட்டவிரோத கடற்றொழிலா ளர்கள் முல்லைத்தீவு கடலில் உள்ள மீன்குஞ்சுகளை பிடிப்ப தால் தற்போது காலத்திற்கு ஏற்ற மீன்களின் பெருக்கம் இல்லாத நிலையில் கடல் காணப்படுவ தாக கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோத தொழில்கள் மூலம் மீன் பிடிப் பதால் கடலில் மீன்கள் குறை வடைந்து மீனவர்கள் கடலுக்கு செல்லாத நிலையும் காணப் படுகிறது. இதனால் சந்தைக ளில் மீன்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் விலைகளும் பாரிய அளவு அதிரிகரித்து காணப்படுகிறது எனவும் தெரி வித்துள்ளார். (4-6)

## ஐக்கிய ராஜ்யத்தைச் சேர்ந்த இளைஞன்

# வறிய மக்களுக்கு உதவ நிதி சேகரிக்கும் நடைபயணம்





(யாழ்ப்பாணம்)

"புனர்வாழ்வும் புது வாழ் வும்" என்ற அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கிலான நடைபயணம் யாழ்ப்பாணத்தில் நேற்று திங் கட்கிழமை நடைபெற்றது.

ஐக்கிய ராஜ்யத்தை தள மாகக் கொண்டு இயங்கும் குறி த்த அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதி களை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத் தில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப மான நடைபவனியில் ஐக்கிய ராஜ்யத்தை சேர்ந்த இளை ஞன் ஒருவர் 55 கிலோ மீற்றர் வரை நடை பயணம் மேற் கொண்டு நிதியிணைத் திரட்டி குறித்த நிதி, குடிநீர் அற்ற மக்க ளுக்கு கிணறுகளை அமைத் துக் கொடுத்தல, வீடற் றோ ருக்கு வீடுகளைக் கட்டிக் கொடு த்தல் மற்றும் பாடசாலைகளுக் கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றிற் காக செலவிடப்படவுள்ளது.

மேலும் குறித்த வெளிநாட்டு இளைஞன் நெல்லியடி மூத்த விநாயகர் வீதியூடாக வரும் போது அப்பகுதி இளைஞர்கள் மோர், இளநீர் வழங்கினர். இதன்போது அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் இதுவரை எவரும் நீர் ஆகாரம் வழங்க வில்லை நீங்கள் தான் முத லில் வழங்கியுள்ளீர்கள் என வும் தெரிவித்தார்.

குறித்த நடைபயணம் புத் தூர் திருச்சபையில் நிறைவ டைந்தமை குறிப்பிடத்தக் கது. (4-33-60)



குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களினால் சிறுவர் சந்தை கடந்த வியாழக்கிழமை காலை 9 மணியளவில் குருநகர் கலாசார மண்டப முன்றலில் நடைபெற்றது.

(படம்: ஏனெஸ்ட்)



ே அருந்ததி மாற்று மோதிரம் ஏற்பாட்டில் மணப்பெண் அலங்கார கண்காட்சி நிகழ்வு யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வானது நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. இதன்போது மணப்பெண் உள்ளிட்ட பல்வேறு அலங்காரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

(படம்: கஜிந்தன்)

# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் வாகனப் பேரணி



(யாழ்ப்பாணம்.)

வடமாகாண தனியார் வர்த் தக ஊழியர் சங்கத்தின் ஏற் பாட்டில் மே தினத்தில் வாகன ஊர்வலமொன்று யாழ்.நகரில் நடைபெற்றது.

இதன்போது மோட்டார் சைக் கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவப்பு கொடியை கட்டியவாறு ஊர்வலம் இடம் பெற்றது.

மே தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப் பாண மாவட்ட செயலகத்திலி ருந்து மோட்டார் வாகன ஊர் வலம் ஆரம்பமாகி [illegible] நிறைவுபெற்றது.

உலகம் முழுவதும் மே தினம் உழைப்பாளர்கள் உரி மைக்காக கொண்டாடப்படு கின்ற நிலையில் நேற்று அனைத்து வர்த்தக நிலை யங்களையும் மூடி ஊர்வலம் இடம்பெற்றது.

இதற்காக பெருமளவு பொலி ஸாரும் வீதிகளிலும் போக்கு வரத்து பொலிஸாரும் கடமை யில் ஈடுபட்டிருந்த போதும் குறைந்தளவானவர்களே ஊர் வலத்தில்பங்கேற்றனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் மர்ம நபர்களால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தழுவ பகுதியில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை கிரிக்கெட் மைதானத்தில் இருவருக்கு இடையில் தகராறு இடம்பெற்றுள்தாகவும் இதன் போது உயிரிழந்தவரின் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரவு முதல் தாக்கப்பட்ட நபர் வீட்டிற்கு வராத நிலை யில் குறித்த நபரை வீட்டு உறவினர்கள் தேடிவந்துள்ளனர்.

இதன்போது தாக்கப்பட்ட நபர் வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள மணல் திடலில் சடலமாக காணப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு நுரைச்சோலைப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது தலையில் பொல்லால் தாக்கிய காயங்களும் காலில் வெட்டுக் காயங்களும் காணப்பட்டதாக தடவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நுரைச்சோலைப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (4)

# தாமரைக் கோபுரத்தில் ஸ்கை டைவிங்

(கொழும்பு)

உலகப் புகழ் பெற்ற சாகச விளையாட்டான ஸ்கை டைவிங் இலங்கையில் அண்மையில் இடம்பெற்றது.

தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமான தாமரை கோபுரத்தில், இந்த சாகச விளையாட்டு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலாத்துறையை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்தும் வகையில், உலகப் புகழ்பெற்ற சாகச விளையாட்டான ஸ்கை டைவிங் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

சாகச விளையாட்டுக்காக, இரண்டு ஸ்கை டைவிங் சம்பியன்கள் அண்மையில் இலங்கை வந்திருந்தனர்.

நிகழ்வில் முதல் முறையாக, தாமரை கோபுரத்தில் இருந்து கீழே குதித்து பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தினர். (4)


## ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்-நயினாதீவு

## பதவி வெற்றிடம்

கோவிலின் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதனால் உரிய தகைமையுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்களுடைய விபரங்களைப் பூரணப்படுத்தி 13.05.2023 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னர் கோவிலில் கிடைக்கக்கூடியதாக "செயலாளர்" அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

1. மின் இயக்குநர் - (Electrician)
2. கணக்குப் பதியுநர் - (Bookkeeper)
3. கணனி இயக்குநர், வடிவமைப்பாளர் - (Computer Designer)

திரு.ந.மோகனரூபன், செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு.

(சி-6463)



## காரைநகர் வியாவில் பூரணை, புட்கலாம்பிகா சமேத அரிகர புத்திர ஐயனார் ஆலய எண்ணெய்க் காப்பு விஞ்ஞாபனம்.

ஏற்றமளி எண்ணெய்க் காப்பில் இணைந்து அருள் பெறுவீர்



காரைநகர் மண்ணில் ஐந்நூறு வருடங்களுக்கு மேல் பழைமையானதும் முதல் தோன்றிய ஆதி கோவிலாகவும் ஏழு தளங்கள் கொண்ட இராஜகோபுரமோடும் திகழ்ந்தது வியாவில் ஐயனார் தேவஸ்தானம். பாலஸ்தாபனம் பண்ணி பத்து மாதங்கள் முடிவடைய முன்னே மகாராணி சோமசேகரம் அவர்களது நேர்த்தியான திட்டமிடலாலும் அடியார்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பாலும் புனருத்தாரணப் பணிகள் நிறைவு பெற்று எதிர்வரும் 03.05.2023 புதன்கிழமை காலை 6.40 மணி முதல் 7.30 வரையுள்ள சுபநேரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

### எண்ணெய்க்காப்புச் சாத்தல்

கும்பாபிஷேகக் கிரியைகளில் தைலாப்பியங்கம் என்று சொல்லப் பெறுகின்ற எண்ணெய்க்காப்பு, எண்ணெய் சாத்துதலும் ஓர் அங்கமாகும். இது குரு, எஜமான், பக்த மகாசனங்கள் எல்லோரும் அன்போடு, பக்திமயமான உணர்வோடு தங்களுடைய கரங்களினாலே இறைவனை ஒரு குழந்தையாக மனதில் நினைத்து மிகவும் மிருதுவாக மேனியெங்கும் நல்லெண்ணெய் சாத்தும் நிகழ்வாகும்.

இதன் மூலம் எட்டுவிதமான திரவியங்கள் கொண்டு எட்டு சக்திகளையும் அஷ்டபந்தனத்தில் பூஜை செய்து இடித்து கபளமாக்கி விம்பத்தையும் ஆசனத்தையும் இணைத்து வைக்க சாத்திய மருந்து மேலும் உறுதியடையும்.

02.05.2023 செவ்வாய்க்கிழமை காலை 09 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும் இந்நிகழ்வில் அடியவர்கள் பெருமளவு கலந்து கொண்டு பூரணை புட்கலாம்பிகா சமேத ஐயனாருடைய பேரருள் பெற்று உய்வார்களாக.

(C-6464)

அனுசரணை:-கஜமுகன் காட்வயர்ஸ், யாழ்ப்பாணம்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 250 | 200 |
| தக்காளி | 200 | 200 | 180 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 240 | 220 | 200 | 250 |
| கரட் | 160 | 240 | 140 | 300 |
| பூசணி | 60 | 50 | 60 | 40 |
| புடோல் | 120 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 |
| வெண்டக்காய் | 120 | 160 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 180 | 380 | 250 | 200 |
| லீக்ஸ் | 280 | 240 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 250 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 500 | 1000 |
| போஞ்சி | 250 | 300 | 320 | 400 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 160 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 600 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 120 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 160 |


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.வீரகத்தி சுதர்சன்
முதுகலைமாணி (MED)
(தேசிய கல்வி நிறுவகம்)



திரு.சாந்தநாதன் பிரியாங்கன்
முதுகலைமாணி (MED)
(தேசிய கல்வி நிறுவகம்)



திருமதி.யயந்தி மோழிதரன்
முதுகலைமாணி (MED)
(இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)



திரு.கிருஸ்ணபிள்ளை சந்திரகுமார்
கல்விமாணி (BED)
(தேசிய கல்வி நிறுவகம்)



திரு.சோமசுந்தரம் சோமச்சந்திரன்
கல்விமாணி (BED)
(தேசிய கல்வி நிறுவகம்)

எமது பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர் திரு.வீ.சுதர்சன், ஆசிரியரான திரு.சா.பிரியாங்கன் முதுகலைமாணி பட்டத்தினையும் கல்விமாணி பட்டத்தினையும் பெற்ற திரு.கி.சந்திரகுமார் திரு.சோ.சோமச்சந்திரன் ஆகிய ஆசிரியர்களையும் எமது பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி.யயந்தி மோழிதரன் முதுகலைமாணி பட்டத்தினையும் பெற்றமையை இட்டு எமது பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: ஆசிரியர், பணியாளர் நலன்புரிச் சங்கம்,
யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

(C-6462)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 137

# யார் கொள்ளையர்கள்?



சீனாவில் நடந்த ஒரு வங்கி கொள்ளையின் போது. கொள்ளையர்கள் துப்பாக்கியுடன் அங்கிருந்த அனைவரையும் பார்த்து "இந்தப் பணம் அரசுக்குச் சொந்தமானது. ஆனால் உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமானது"

அனைவரும் அசையாமல் கீழே படுத்து விட்டார்கள். மனதை மாற்றும் முறை என்பது இதுதான்.

அங்கே ஒரு பெண் கொள்ளையர்களின் கவனத்தை திருப்பும் வகையில் (கவர்ச்சிகரமாக) நடந்தாள். அப்பொழுது கொள்ளையர்களில் ஒருவன், "இங்கு நடக்கப் போவது கொள்ளையோ, கற்பழிப்போ அல்லது காதல் கதையோ அல்ல" என்று மிரட்டி அமர வைத்தான். இதைத்தான் செய்யும் தொழில்களில் கவனம் தேவை என்று சொல்கிறோம்.

கொள்ளையடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் கொள்ளையர்களுள் ஒருவன் கேட்டான் "வாருங்கள் சீக்கிரம் பணத்தை எண்ணி விடலாம்" என்று. மற்றொருவன் சொன்னான், பொறு. அவசரம் வேண்டாம். பணம் நிறைய இருப்பதால் கணக்கு பார்க்க நேரம் எடுக்கும் அதனால் நாம் எவ்வளவு கொள்ளை அடித்தோம் என்பதை நாளை செய்திகளில் அரசாங்கமே அறிவித்து விடும். அதன்பிறகு நாங்கள் பணத்தை பங்கு போடலாம்.

இதை தான் படிப்பை விட அனுபவம் சிறந்தது என்போம்.

வங்கியின் மேலாளர் இச்சம்பவத்தை காவல் துறையிடம் சொல்ல முனைந்த போது அவனுடைய மேல் அதிகாரி தடுத்து அவனிடம் கூறினார். வங்கியில் கொள்ளை போனது 20 கோடி தான். நாம் மேலும் 30 கோடி பதுக்கி வைத்து மொத்தமாக ஐம்பது கோடி கொள்ளை போய்விட்டது என்று சொல்லி விடுவோம் என்றான்.

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பது இது தான்

.

இதைக் கேட்ட மற்றொரு அதிகாரி "வருடம் ஒரு கொள்ளை சம்பவம் இவ்வாறு நடந்தால் மிக நன்றாக இருக்கும்" என்றார்.

"கலியுகம்" என்பது இது தான்.

மறுநாள் செய்தித்தாள்களில் வங்கியில் 100 கோடி கொள்ளை போய்விட்டது என்று அறிவிக்கபட்டது. கொள்ளையர்கள் அதிர்ந்து போய் பணத்தை எண்ணிப் பார்க்க தொடங்கினர்.

எவ்வளவு எண்ணியும் அவர்களால் இருபது கோடிகளுக்கு மேல் எண்ண முடியவில்லை.

கொள்ளையர்களில் ஒருவன் உடனே எரிச்சல் அடைந்து. நாம் உயிரைப் பணயம் வைத்து இருபது கோடி கொள்ளையடித்தோம். ஆனால் இந்த வங்கி அதிகாரிகள் சிரமம் இல்லாமல் எண்பது கோடி கொள்ளை அடித்து விட்டனரே என்று அதிர்ச்சி அடைந்தான்.

வங்கியின் முதலாளிகளுக்கும் இப்பொழுது மிகுந்த மகிழ்ச்சி ஷேர் மார்க்கெட்டில் வங்கி அடைந்த நஷ்டத்திற்கு, இக்கொள்ளைச் சம்பவம் அதை ஈடு செய்து விட்டது என்று பெருமிதம் அடைந்தார்.

படிப்பின் அவசியம் இப்பொழுதுதான் தெரிகிறது தான் படித்திருக்க வேண்டும் என்றான்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# வவுனியாவில் மே தின ஊர்வலம்!




(குருமன்காடு)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பிரதான மே தினக்கூட்டமும் ஊர்வலமும் வவுனியாவில் நேற்று காலை இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடை வீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்தது.

அங்கு மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன். தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத்தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

ஊர்வலத்தின் போது விலையேற்றத்தைக் கண்டித்தும் தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் செயற்பாட்டை கண்டித்தும் கோசங்கள் எழுப்பபட்டதுடன், ஐ.எம்.எப் உடன்படிக்கை சித்தரிக்கும் ஊர்தியும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தது. குறித்த ஊர்வலத்தில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(4-6-250)

# கிளிநொச்சியில் உறவுகள் நேற்று போராட்டம்



(முறிகண்டி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2261 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், உழைக்கும் பராயத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளிற்கு நீதி கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மே நாளான நேற்று அதற்கான எதிர்ப்பை வெளியிட்டும் வலிகாமம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக A-9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது. (4-6-100-316)

# மே தினத்தை முன்னிட்டு மன்னாரில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள்



(மன்னார்)

சர்வதேச உழைப்பாளர் தினம் மற்றும் புனித சூசையப்பர் திருநாளை முன்னிட்டு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் நேற்று திங்கட்கிழமை ஆகிய இரு நாட்கள் தாழ்வுபாடு கடல் பகுதியில் இடம் பெற்றது

நீச்சல்,உள்நீச்சல்,கட்டுமரம் வளித்தல்,மைதான நிகழ்வுகள் உள்ளடங்கலாக பல போட்டிகள் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் மீனவர்கள், இளைஞர்கள், கிராம மக்கள், தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-285)

# குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி அமைப்பு



(குருமன்காடு)

வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்திவேலி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டாணிச்சூர் புளியங்குளத்தின் குருமன்காட்டுக்கு அண்மித்த மன்னார் வீதி ஓரமாகவுள்ள நீரேந்து பிரதேசத்தை ஆக்கிரமித்து குறித்த சில நபர்களால் கம்பி கட்டை போடப்பட்டு கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, குறித்த பகுதிக்கு அண்மையாக ஒரு பெண் தனது வீட்டினை அண்மித்த காணித் துண்டம் ஒன்றினை வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் ஜேசீபி இயந்திரத்துடன் சென்று குறித்த வேலிகளை அகற்றியதுடன், அப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர். ஆனால், இரவோடு இரவாக குறித்த பகுதியில் கம்பி வேலி அமைக்கப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்
# கணிதம் பகுதி - II

## பகுதி A

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**01.** கைப்பணத்திற்கு ரூபா 65000 பெறுமதியான குளிர் சாதனப் பெட்டி ஒன்றை முதலில் 5000 ஐ செலுத்தி எஞ்சியதை சமனான மாதாந்த தவணைகளில் இரண்டு வருடத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். கடன் தொகைக்காக குறைந்து செல்லும் வட்டி அடிப்படையில் 6% வட்டி வீதம் அறவிடப்படும். மாதாந்த தவணைக் கட்டணத்தைக் காண்க.

**02.** $y = x^2 - 4x + 1$ சார்பை வரைவதற்கு தயாரிக்கப்பட்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 6 | 1 | -2 | ........ | -2 | 1 | 6 |

i. $x = 2$ ஆகும் போது $y$ இன் பெறுமானத்தைக் காண்க.

ii. பொருத்தமான அளவிடையில் மேற்குறித்த தரவிற்கேற்ப இருபடி சார்பின் வரைபை வரைக.

iii. சார்பு நேராகக் கூடும் $x$ இன் பெறுமான வீச்சை எழுதுக.

iv. தரப்பட்ட இருபடி சார்பை $y = (x + a)^2 + b$ எனும் வடிவில் காட்டுக.

v. வரைபிலிருந்து $x^2 - 4x + 1 = 0$ இன் மூலகங்களைக் கண்டு அதிலிருந்து $\sqrt{3}$ இன் பெறுமானத்தை முதலாம் தசம தானத்தில் காண்க.

**03.** 30 நாட்களைக் கொண்ட மாதமொன்றில் வருண் தொலைபேசியை பாவித்த காலம் தொடர்பாக அவரின் தாயாரால் குறிக்கப்பட்ட தரவுகள் பின்வரும் மீடிறன் பரம்பலில் காட்டப்பட்டுள்ளது.

| காலம் (நிமிடம்) | 20-40 | 40-60 | 60-80 | 80-100 | 100-120 | 120-140 | 140-160 |
|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 1 | 5 | 6 | 10 | 4 | 3 | 1 |

i. அதிகமான நாட்கள் தொலைபேசியைப் பாவித்த காலத்தின் வகுப்பாயிடையைக் காண்க.

ii. பொருத்தமான உத்தேச இடையை பாவித்து அல்லது வேறு முறையில் அவர் ஒருநாளில் தொலைபேசியை பாவித்த காலத்தின் இடையைக் காண்க.

iii. அவன் வாரத்தில் 10 மணித்தியாலங்களுக்கு கூடுதலாக தொலைபேசியை பாவிப்பதாக அவனின் தாயார் கூறினார். இக்கூற்றின் உண்மை, உண்மையற்ற தன்மையை காரணங்களுடன் கூறுக.


**04.** ரூபன் குறித்த நாளில் இரண்டு தோசையும் 3 வடையும் வாங்குவதற்கு ரூபா 165 ஐ செலவு செய்தான். அடுத்த நாள் தோசையொன்றின் விலை ரூபா 20 ஆலும் வடையொன்றின் விலை ரூபா 5 ஆலும் அதிகரித்ததனால் அன்றைய தினம் ரூபன் ஒரு தோசையையும் 2 வடையையும் வாங்கினார். இதற்காக செலவழித்த பணத்தொகை ரூபா 120 ஆகும்.

ஒருங்கமை சமன்பாட்டு சோடி ஒன்றை உருவாக்கி தீர்ப்பதன் மூலம் விலை அதிகரிப்பதற்கு முன் தோசையொன்றின் விலையையும் வடை ஒன்றின் விலையையும் தனித்தனியே கண்டு இரண்டு உணவு வகைகளினதும் விலை அதிகரிப்பின் சதவீதம் சமனானது எனக் காட்டுக.


**05.** i. $\frac{1}{(x-2)} + \frac{1}{x^2-9x+14}$ சுருக்குக.

ii. தரப்பட்ட நாற்பக்கல் ABCD இல் BC=DC ஆகும். அதில் AB இன் நீளம் BC ஐ விட 4cm ஆல் கூடியதாகும். ABCD இன் பரப்பளவு $22cm^2$ ஆகும். DC= x cm எனக் கொண்டு x இனால் $x^2 + 2x - 22 = 0$ சமன்பாடு திருப்தியாக்கும் எனக் காட்டுக. அதனைத் தீர்ப்பதன் மூலம் x இன் பெறுமானத்தை முதலாம் தசம தானத்தில் காண்க.

($\sqrt{23} = 4.79$ எனக் கொள்க.)




**06.** விளையாட்டு களகமொன்றில் 45 அங்கத்தவர்கள் உள்ளதோடு அவர்களில் 30 பேர் ஆண்கள் ஆவதுடன் 13 பேர் 16 வயதிலும் குறைந்தவர்கள் ஆவர். 16 வயதிலும் கூடிய பெண்களின் எண்ணிக்கை 7 ஆகும்.




i. மேலே தரப்பட்ட வெண்ணுருவை பூரணப்படுத்துக.

ii. 16 வயதிலும் கூடிய ஆண்களைக் காட்டும் பிரதேசத்தை நிழற்றுக.

iii. n(A n B) காண்க.

iv. 16 வயதிலும் குறைந்த பெண்களின் எண்ணிக்கையைக் காண்க.


v. எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் 16 வயதிலும் குறைந்த ஒருவராக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு B

**5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**07.** (a) கீழே காட்டப்படுவது தீக்குச்சிகளால் ஆக்கப்பட்ட 3 உருவங்களாகும்.



(1) (2) (3)

i. மேலே ஒவ்வொரு உருவிலும் உள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கையை எழுதி அது எவ்வகையான தொடராக அமையுமெனக் காண்க.

ii. ஏழாவது உருவை அமைப்பதற்குத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கையைக் காண்க.

iii. ஒரு தீப்பெட்டியில் 50 தீக்குச்சிகள் இருக்குமாயின் மேற்காட்டியவாறு 10 வடிவங்களை அமைப்பதற்கு 5 தீப்பெட்டிகள் போதுமானதெனக் காட்டுக.

(b) 1 , (-2) , 4 , (-8) , ....... எனும் பெருக்கல் தொடரின் முதல் 5 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

**08.** கீழ்க் காணும் அமைப்பை cm/mm அளவீடுகளுடன் நேர்விளிம்பு, கவராயம் மாத்திரம் பயன்படுத்துக. அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டுக.

i. AC = 6 cm, AB = 8cm, $B\hat{A}C = 90°$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்க.


ii. BC இன் நீளத்தை அளந்து எழுதுக.

iii. A, B புள்ளிகளுக்கு சமதூரத்தில் அசையும் ஒழுக்கை அமைத்து அது AB, BC ஐ இடைவெட்டும் புள்ளிகள் முறையே M,N எனக் குறித்து, N ஐ மையமாகவும் NA ஆரையாகவும் கொண்ட வட்டத்தை அமைக்க.

iv. M இனூடாக BC க்கு சமாந்தரமாக நேர் கோடொன்றை அமைத்து அது AC ஐ இடைவெட்டும் புள்ளியை P எனப் பெயரிடுக.

v. AP = PC ஆவதற்குக் காரணத்தை எழுதுக.

**09.** இணைகரம் ABCD இன் மூலைவிட்டம் AC இன் மீது புள்ளிகள் X,Y புள்ளிகள் அமைந்திருப்பது AX = XY = YC ஆகுமாறு நீட்டப்பட்ட BY இற்கு D இலிருந்தும் நீட்டப்பட்ட DX இற்கு B இலிருந்தும் அமைக்கப்பட்ட செங்குத்துகளின் அடி முறையே E,F ஆகும்.





i. ADX$\triangle$ = YBC$\triangle$ என நிறுவுக.

ii BE, CD பக்கங்கள் O வில் இடைவெட்டுகின்றன எனின் DX = 2YO எனக் காட்டுக.

iii. DEBF செவ்வகமாகும் என் நிறுவுக.


**10.** O வை மையமாகவுடைய வட்டத்தில் AC விட்டமாகும். BC = CD ஆகுமாறு B,C,D ஆகிய புள்ளிகள் வட்டத்தின் மீது அமைந்துள்ளன. பக்கம் DC ஆனது E வரை நீட்டப்பட்டுள்ளது. $A\hat{O}D + B\hat{C}E = 2A\hat{B}C$ எனக் காட்டி $A\hat{O}D$ $B\hat{C}E$. மிகை நிரப்புமெனக் காட்டுக.

**11.**





(a.) கிடைத் [illegible] ...ுத்தான கட்டிடத்தின் 50m உயரத்தில் உள்ள ஜன்னலின் ஊடாக பார்க்கும்போது கிடைத்தரையில் 45m முன்னால் அமைந்த செங்குத்தான கம்பமொன்றின் உச்சி 35° இறக்க கோணத்தில் தென்பட்டது.

கம்பத்தின் உயரத்தைக் காண்க.




(b)




மேற்குறித்த தூர நேர வரைபில் காட்டப்படுவது மோட்டார் வாகனமொன்றின் இயக்கமாகும். அதில் பகுதி CD இல் வாகனத்தின் கதியைக் காண்க. CD பகுதியில் வேகத்திலேயே ஆரம்பம் முதல் பயணித்திருந்தால் மேற்குறித்த தூரத்திற்காக செலவிடுவது தூரநேர வரைபின் மூலம் காட்டப்படும் காலத்தில் 1/3 பங்காகும் என காரணங்களுடன் காட்டுக.

**12.** i. நீளம், அகலம், உயரம் முறையே 10cm, 8cm, 25cm ஆகவுள்ள கனவுரு வடிவான பாத்திரம் ஒன்றின் கொள்ளளவைக் காண்க.

ii. அதில் அரைவாசிக்கு நீர் நிரப்பி சிறிய 240 உலோக கோலங்களை ஒரே நேரத்தில் இடும் போது பாத்திரத்தில் உள்ள நீரில் 250mm நீர் வெளியேறுகின்றது.
உலோக கோளத்தின் ஆரை r எனின் $r = \frac{5}{2.\sqrt[3]{4\pi}}$ எனக் காட்டுக.

iii. $4\pi = 12.56$ எனின் மடக்கையைப் பயன்படுத்தி r இன் பெறுமானத்தைக் காண்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**பிறர் மனம் புண்படாத விதத்தில் பேசும் கன்னி இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.04.2023 முதல் 8 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் குரு சுபகிரகம் என்பதால் அதன் பார்வை பலத்தால் நன்மைகளை வழங்குவார். இக்காலத்தில் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள், எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். துன்பங்களிலிருந்து விடுபட தொடர்ந்து வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். வியாழக்கிழமை விரதமிருந்து குரு பகவானை வழிபடுவதோடு சுய ஜாதக அடிப்படையில் யோகம் தரும் தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவது நல்லது.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான் உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் இப்பொழுது எட்டாம் இடத்திற்கு வருகின்றார். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைப்

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். எனவே இரண்டாம் இடத்தில் குரு பார்வை பதிவதால் தன ஸ்தானம் புனிதமடைகின்றது. தன வரவு தாராளமாக வந்து சேரும். அதே சமயம் விரய ஸ்தானத்தையும் குரு பார்ப்பதால் வீண்விரயம் ஆகாமல் சுபவிரயமாக மாற வழி ஏற்படுத்தும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றம் வரலாம். வெளிநாடு அல்லது வெளிமாநிலத்தில் இருந்து அழைப்புகள் வரலாம். குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் வீடுகட்டும் வாய்ப்பும் இடம், பூமி வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். பழைய சொத்துக்களை விற்றுவிட்டு ஒருசிலர் புதிய சொத்துக்களை வாங்குவர். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புதிய வாகனத்தை வாங்கி பயணிக்கும் எண்ணம் மேலோங்கும். உத்தியோகத்தில் வெளிநாடு சென்று பணிபுரிய நினைத்தவர்கள் அது கைகூடி மகிழ்ச்சி தரும். 12 ஆம் இடத்தைக் குரு பார்ப்ப

வேண்டிய பதவி உயர்வு சகப் பணியாளர்களைப் போய்ச் சேரும். பரணி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் பரணி நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணவரவு திருப்தி தரும். ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தில் ஏற்படும் அரசல் புரசல்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிநிரந்தரம் பற்றிய தகவல் வரலாம். திரும்பிச் சென்ற வரன்கள் கூட மீண்டும் வரலாம். கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். வீடு மாற்றங்களும் இட மாற்றங்களும் ஏற்படலாம். வரும் மாற்றங்கள் நன்மையைத் தருவதாக இருக்கும். பிள்ளைகளுக்கான சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படும். சீமந்தம், காதுகுத்து, நிச்சயதார்த்தம், புதுமனை புகுவிழா, திருமணம்

இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். இதுவரை குரு வுடன் ராகு சேர்ந்திருந்தது. இப்பொ ழுது ராகு விலகுவதால் குரு பகவான் பலம் பெறுகின்றார். இக்காலத்தில் ராகு கேதுக்குரிய நாகசாந்திப் பரிகாரங்களை செய்வது நன்மை தரும்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். இக் காலத்தில் உங்களுக்கு இனிய பலன்கள் நடைபெறும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும் பொழுது யோகத்தைச் செய்யும் என்பது பொதுவிதி. கல்யாணத் தடைகள் அகலும். கட்டட்டம் கட்டும் பணியில் இருந்த தொய்வு நீங்கும். பொது வாழ்வில் இருப்பவர்கள் இழந்த பதவியை மீண்டும் பெறுவர். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். தொழில்



**கன்னி**

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

## வீடு கட்டும் வாய்ப்பும் இடம், பூமி வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்!



## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அதிக விரயங்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவச் செலவுகளும் மனக் கவலைகளும் உருவாகும். சிக்கனத்தைக் கையாண்டு, செலவுகளை குறைத்துக் கொள்வதன் மூலம் தக்க பலன் உங்களுக்கு கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். எட்டினில் குருவும் வந்தால் இடமாற்றம் வந்து சேரும்! பெட்டியில் தொகை வைத்தாலும் பிறருக்கே பயனாய் மாறும்! திட்டங்கள் மாறிப் போகும்! திருப்பங்கள் பலவும் சேரும்! வெற்றியைக் காண வேண்டின் விரதத்தைக் கடைப்பிடிப்பீரே! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் தொழில் வியாபாரத்தில் மிகுந்த கவனத்தோடு இருப்பது நல்லது. உத்தியோகத்தில் வரும் இடமாற்றம், உள்ளத்தை நெருட வைக்கும். மதிப்பையும் மரியாதையையும் தக்க வைத்துக் கொள்ள இயலாது.

தால் விரயங்கள் அதிகரிக்கலாம். அது சுப விரயங்களாகவே இருக்கலாம். ஆன்மிகப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் சிலருக்கு வரலாம். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

அசுவதி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் கேதுவின் சாரத்தில் அசுவதி நட்சத்திரக் காலில் சஞ்சரிக்கின்றார். இக்காலத்தில் நீங்கள் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. எதிர்காலத்தைப் பற்றிய பயம் மனதைக் கவ்வும். திடீர் விரயங்கள் மனதை சஞ்சலப்படுத்த வைக்கும். பொருளாதாரத்தில் பற்றாக்குறையின் காரணமாக கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். ஆரோக்கியப் பாதிப்புகள் உண்டு. உத்தியோகத்தில் உங்களுக்கு வர

போன்றவற்றை நடத்த வாய்ப்புகள் கைகூடிவரும். ஆரோக்கிய சீர்கேடுகள் அகல ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் பிரச்சினைகள் தலைதூக்கலாம். திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது.

**ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷ இராசியில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் (08.10.2023) அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றனர். உங்கள் இராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கும் இந்த நேரம் நாக தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். எனவே உடல்நலத் தொல்லையும் உற்சாகக் குறைவும் ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உங்களை விட்டு விலகலாம். தடுமாற்றங்கள் அதிகரிக்கும். இந்த நேரத்தில் எதையும் நீங்கள் திட்டவட்டமாகச் செய்ய இயலாது. நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் தானாக வந்து சேரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக

வளர்ச்சியில் மாற்றினத்தவர்களின் பங்களிப்பு அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளுக்கு நெருக்கமாகி வேண்டிய சலுகைகளைப் பெறுவீர்கள். பிறருக்கு பொறுப்பு சொல்லிக் கொடுத்த தொகை வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு முன்னேற்றப் பாதையில் சில முட்டுக்கட்டைகள் வந்து சேரும். வரன்கள் தள்ளிப் போகலாம். கடின முயற்சிக்குப் பின்னரே சில காரியங்கள் கைகூடலாம். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். பணநெருக்கடிகள் ஏற்பட்டாலும் கடைசி நேரத்தில் காரியம் கைகூடிவிடும். பிள்ளைகளின் சுபகாரியங்கள் நிறைவேற்ற பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும். நீண்டதூரப் பயணங்கள் மனக்கிலேசத்தை அதிகரிக்கச் செய்யும். திட்டமிட்டுச் செலவு செய்வதன் மூலமே திருப்தியான வாழ்வை அமைத்துக்கொள்ள இயலும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜையறையில் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணா மூர்த்தி படம் வைத்து வழிபடுவது நல்லது. பஞ்சமி திதியன்று வராஹி அம்மனுக்குரிய கவசம் பாடி வழிபாடு செய்தால் நெஞ்சம் மகிழும் வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 167





எந்தவித அடிமைத்தனமும் பொல்லாததுதான்! ஆனால் பெண்ணடிமைத்தனத்தைப் போல் ஒருவனை மதி இழக்கச் செய்வது வேறொன்றுமில்லை.

"நாலு நாள் வெளியூரில் இருந்து விட்டுத்தான் வந்தீர்களே? திரும்பி வந்தவுடனே நேரே ஏன் இங்கு வரவில்லை? என்னை விடத் தங்களுக்குத் தங்கள் தம்பிதானே முக்கியமாகிவிட்டார்!" என்று கேட்டாள் நந்தினி. கேட்டுவிட்டுக் கள்ளக் கோபத்துடன் அவரைக் கடைக் கண்ணால் பார்த்தாள்.

"அப்படியில்லை, என் கண்மணி! வில்லிலிருந்து புறப்பட்ட பாணத்தைப் போல் உன்னிடம் வருவதற்குத்தான் என் மனம் ஆசைப்பட்டது. ஆனால் அந்த அசட்டுப் பிள்ளை "மதுராந்தகன்" சுரங்க வழியின் மூலமாகப் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்கிறானா என்று தெரிந்து கொள்வதற்காகவே தம்பியின் வீட்டில் தாமதிக்க வேண்டியதாயிற்று"

"ஐயா! தாங்கள் எடுத்த காரியங்களிலெல்லாம் எனக்குச் சிரத்தை உண்டு. தங்கள் முயற்சி அனைத்தும் வெற்றி பெற வேண்டுமென்றுதான் நானும் ஆசைப்படுகிறேன். ஆனாலும் நான் ஏற வேண்டிய மூடு பல்லக்கில் ஒர் ஆண் பிள்ளையைத் தாங்கள் ஏற்றிக் கொண்டு போவதை நினைத்தால் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது.நாடு நகரங்களில் உள்ள ஜனங்கள் எல்லோரும் தாங்கள் போகுமிடமெல்லாம் என்னையும் கூட அழைத்துப் போவதாக எண்ணுகிறார்கள்."

"அது எனக்கு மட்டும் சந்தோஷமளிக்கிறது என்றா நினைக்கிறாய்? இல்லவே இல்லை! ஆனால் எடுத்த காரியம் பெரிய காரியம். அதை நிறைவேற்றுவதற்காகச் சகித்துக் கொண்டு செய்கிறேன். மேலும், இந்த யோசனை கூறியதே நீதான் என்பதை மறந்து விட்டாயா? உன்னுடைய மூடுபல்லக்கில் மதுராந்தகனை அழைத்துப் போகும்படி நீதானே சொன்னாய்? கோட்டையிலிருந்து போகும் போதும் வரும் போதும் அவனைத் தனியாகச் சுரங்க வழியில் அனுப்பும் யுக்தியையும் நீதானே கூறினாய்?."

"என்னுடைய கடமையைத்தான் நான் செய்தேன். கணவர் எடுத்திருக்கும் காரியத்துக்கு உதவி செய்வது மனைவியின் கடமை அல்லவா? ஏதோ எனக்குத் தெரிந்த யுக்தியைச் சொன்னேன். தங்களுக்கு அதனால்."

"அது மட்டுமா செய்தாய்? இந்த மதுராந்தகன் உடம்பெல்லாம் விபூதியைப் பூசிக் கொண்டு ருத்ராட்ச மாலையை அணிந்து நமசிவாய ஜபம் செய்து கொண்டிருந்தான்! கோவில், குளம் என்று சொல்லிக் கொண்டு 'அம்மாவுக்குப் பிள்ளை நான்தான்' என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தான்! அரசாள்வதில் ஆசை உண்டாக்க நாங்கள் எவ்வளவோ முயன்றும், முடியவில்லை.

இரண்டு தடவை நீ அவனுடன் பேசினாய், உடனே மாறிப் போய் விட்டான். இப்போது அவனுக்கு உள்ள இராஜ்ய ஆசையைச் சொல்லி முடியாது. தற்போது அவனுடைய மனோராஜ்யம் இலங்கையிலிருந்து இமயமலை வரையில் பரவியிருக்கிறது! பூமியிலிருந்து ஆகாசம் வரையில் வியாபித்திருக்கிறது.

நம்மைக் காட்டிலும் அவனுக்கு அவசரம் தாங்கவில்லை. சோழ சிம்மாசனத்தில் ஏறத் துடித்துக் கொண்டிருக்கிறான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூட்டையை வைத்தால்

(நேற்றைய தொடர்ச்சி..)



துணி மூட்டையா அது? என்ன கனம்? என்னால் தூக்கிக் கொண்டு நடக்கவே முடியவில்லை. நான் கீழே வைக்க முயன்றால் போதும். எப்படித்தான் உனக்குத் தெரியுமோ? உடனே நீ கீழே வைக்காதே, என்று குரல் கொடுக்கிறாய். அதைத் தூக்கிச் செல்ல நான் படும் துன்பம் எனக்குத்தான் தெரியும். இனிமேல் அழுக்குத் துணி மூட்டையை நான் எடுத்துச் செல்ல மாட்டேன் என்றான் அவன்.

இன்னும் ஒரே ஒரு முறை மட்டும் எடுத்துச் செல்லுங்கள். அதன் பிறகு நானே இங்கு துவைத்துக் கொள்கிறேன். துணியைக்கூட நீங்கள் அங்கிருந்து கொண்டு வர வேண்டாம். இந்த முறை மூட்டை அதிக கனமாக இருக்கும். என்றாள் அவள்.

இதுதான் கடைசி முறை, இனிமேல் முட்டையைத் தூக்கிச் செல்ல மாட்டேன் என்றான் அவன்.

பிறகு வெளியே சென்று விட்டான்.

அந்த மாளிகைக்குள் இருந்த விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் திரட்டினாள் அவள். அவற்றை எல்லாம் சாக்கு மூட்டைக்குள் போட்டாள்.

புறப்படும் நாள் வந்தது. இளைஞனிடம் அவள், எனக்கு உடல் நலம் சரியில்லை. நான் அறைக்குள் படுத்திருப்பேன். என்னை எழுப்ப வேண்டாம். இன்று மட்டும் இருட்டியதும் அந்த மூட்டையை எடுத்துச் செல்லுங்கள். வழியில் எங்கும் கீழே வைக்காதீர்கள். என்னை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம். இங்கிருந்தபடியே எங்கும் நடப்பதை என்னால் சொல்ல முடியும் என்றாள்.

நீ மூட்டையை கட்டி வை. நான் திரும்பி வந்ததும் எடுத்துச் செல்கிறேன், என்று வழக்கம் போல வெளியே புறப்பட்டான் அவன்.

உடனே அவள் தன் படுக்கையில் தலையணைகளை வைத்தாள். மேலே போர்வையைப் போட்டு மூடினாள். சிறிது தூரத்தில் இருந்து படுக்கையைப் பார்த்தாள். யாரோ படுத்திருப்பதைப் போன்று தோன்றியது.

சாக்கு மூட்டைக்குள் நுழைந்தாள் அவள். தன்னைச் சுற்றிப் பல பொருட்களை வைத்தாள். வெளியே ஒரு கையை மட்டும் நீட்டி சாக்கைக் கட்டினாள். பிறகு கையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் இளைஞன் உள்ளே வந்தான். படுக்கையில் அவள்தான் படுத்து இருக்கிறாள் என்று நினைத்தான்.

சாக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். மூட்டை மிகவும் கனமாக இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஏழைகளுக்கு ஒரு சொத்தாகவும், பணக்காரனுக்கு பெருமை சேர்ப்பதாகவும், இளைஞர்களுக்கு உதவியளிப்பதாகவும், வயது முதிர்ந்தவர்களுக்கு ஆதரவாகவும் வசதியளிப்பதாகவும் இருக்கிறது.

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தனியார் பல்கலைக்கழகங்களை தமிழர் தாயகத்தில் ஆரம்பியுங்கள்

இப்போது இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை இயக்குவதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கி வருகிறது.

இந்தவகையில் தென்பகுதியில் கணிசமான தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாகியுள்ளன.

பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களும் தனியார் பல்கலைக்கழகங்களில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் பட்டப்படிப்பை நிறைவு செய்தல், குறித்த தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களுக்கு நிறுவனங்களில் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பு மற்றும் திருப்திகரமான வேதனம் என்பவை காரணமாக தனியார் பல்கலைக்கழகங்கள் முதன்மை பெறுவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது.

இந்நிலைமையானது இளைஞர்களை நல்வழிப்படுத்தி, அவர்களை சமுதாயத்துக்கு உகந்தவர்களாக – ஆற்றல் மிகுந்தவர்களாக ஆக்குகிறது.

எனவே நம் தமிழர் தாயகத்திலும் இவ்வாறு தரம் மிகுந்த தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நம்மைப்பொறுத்தவரை எங்கள் தமிழர் தாயகத்தில் அதிலும் குறிப்பாக வடபுலத்தில் இருக்கக்கூடிய பிரபலமான கல்லூரிகள் காத்திரமான பழைய மாணவர் சங்கங்களை கொண்டுள்ளன.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, மன்னார் சித்திவிநாயகர் கல்லூரி உள்ளிட்ட பல கல்லூரிகளில் வசதியும் புலம்பெயர் நாடுகளின் தொடர்பும் உடைய செழுமைமிக்க பழைய மாணவர்கள் உள்ளனர்.

இவ்வாறான பழைய மாணவர் சங்கங்கள் தமது கல்லூரி என்ற எல்லையைக் கடந்து, தனியார் பல்கலைக்கழகங்களை தமிழர் பிரதேசங்களில் ஆரம்பிப்பது தொடர்பில் கருசனை காட்டுவார்களாயின் அதன் மூலம் எங்கள் மாணவர்கள் பொருத்தமான துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் அதன்மூலம் தகுதியான வேலைவாய்ப்பை பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

எனவே மேற்குறிப்பிட்ட பழைய மாணவர் சங்கங்கள் தனித்தும் கூட்டுச்சேர்த்தும் தனியார் பல்கலைக்கழகங்களை இங்கு உருவாக்க வேண்டும்.

தேவையேற்படின் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் உடன்படிக்கை செய்கின்ற சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தலாம்.

ஆகவே தாங்கள் கற்ற கல்லூரிகளின் அபிவிருத்தி என்ற சிந்தனைக்கும் அப்பால் எங்கள் தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு என்ற நோக்கிலும் சிந்தித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய துறைகளை உள்ளடக்கிய தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க முன்வர வேண்டும்.

இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசை வீழ்த்துவதே எமது ஒரே இலக்கு

## எதிர் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசை வீழ்த்துவதே எமது ஒரே இலக்கு என எதிரக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் .மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, ஏ.ஈ.குணசிங்க மைதானத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்

உழைக்கும் தொழிலாளர்கள் செறிந்து வாழும் மலையகத்திலும் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாம் பதவிகளுக்காக அரசியல் செய்பவர்கள் அல்ல. எமது அரசியலின் நோக்கம் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதேயாகும்.

தற்போது ஊழல் மோசடியாளர்களே ஆட்சியமைத்துள்ளனர். அதன் காரணமாகவே உள்நாட்டுக்கு அப்பால்சென்று வெளிநாடுகளிடம் இலஞ்சம் கோரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமக்கு ஒரு போதும் இவ்வாறான அரசாங்கத்துடன்இணையும் எண்ணமில்லை. மாறாக ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே நாம் அரசாங்கத்துக்குச் செல்வோம்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் அவரது ஆட்சி காலத்தில் இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கின்றார்.

ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்களுக்கான சலுகைகளை நீக்கவோ நிவாரணங்களை வழங்காமலோ இருக்கவில்லை.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அவ்வாறல்ல எனவே தான் நாணய நிதிய ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் நாம் பங்கேற்கவில்லை.

உலகில் முதன்மையான நாடாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும். எனவே இன மத பேதமற்ற தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசாங்கம் எம்மால் அமைக்கப்படும்.

இம்முறை மே தினத்தில் எமது சபதம் யாதெனில் ராஜபக்ஷர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை வீழ்த்துவதேயாகும்.

அத்தோடு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மக்களுக்கு சாதகமானதாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் புதுப்பிக்கப்படும் என்றார். (ம-7,9)

## காய்கறிகளின் நுகர்வு 40 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

காய்கறி நுகர்வு சுமார் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது.

காய்கறிகளின் மொத்த விற்பனை விலை குறைந்துள்ளதாலும் சில்லறை சந்தையில் விலை ஸ்திரமாக உள்ளதால் நுகர்வு அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிகின்றனர்.

சில வருடங்களுக்கு பின்னர் மரக்கறிகளின் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார ம்த்திய நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பெறப்பட்ட அனைத்து மரக்கறிகளின் விலையும் ஒரு கிலோ இருநூறு ரூபாவை தாண்டவில்லை எனவும் நேற்று முன்தினம் சுமார் 07 இலட்சம் கிலோ மரக்கறிகள் கிடைத்துள்ளதாகவும் தம்புள்ளை விசேட பொருளாதார வர்த்தக நிலையத்தின் தொழிற் சங்க செயலாளர் ஐ.ஜி. விஜயானந்தா தெரிவித்துள்ளார்.

1 கிலோ பச்சை மிளகாய் 180 ரூபாவும், கத்தரிக்காய் 200 ரூபாயும் கேரட் மற்றும் வெண்டைக்காய் 140 ரூபாயும், பீன்ஸ் 150 ரூபாயும், தக்காளி 100 ரூபாயும், பூசணிக்காய் 45 ரூபாயும் அதிகபட்ச மொத்த விற்பனை விலையாகும் என செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சுழிபுரம், கள்ளவேம்படி, பத்தானைக் கேணியடி, தொல்புரம், சக்தியகாடு மண்கும்பான் நீர்ப்பாசன சபை, மண்டைதீவு கடற்படை முகாம், அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, மண்டைதீவு, மண்கும்பான், மண்கும்பான் விடுதியடி, பூம்புகார், வெண்புரவிநகர், ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேத்தில்** மகாறம்பைக்குளம், அழகல்ல (தீருவேகம்), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய பிரதேசங்களிலும் 03.05.2023 நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம், கள்ளிகுளம், காயாங்குளம், சிதம்பரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** துள்ளுகுடியிருப்பு திட்டம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், டயலொக் -தள்ளாடி, கடலேரி வீதி, புகையிரத நிலையம்-சாந்திபுரம், சவுத்பார் இராணுவ முகாம், [illegible] ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### டீசல் விலை குறைந்தாலும்

## பஸ் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

(கொழும்பு)

டீசலுக்கான விலையான்து 15 ரூபாவால் குறைத்துள்ள போதிலும் பஸ் கட்டணத்தில் எந்த வித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொது போக்குவரத்து சேவையை தரமான சேவையாக நடத்தும் வகையிலான எந்தவொரு நடவடிக்கைகளையும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் எடுக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இதனால் பஸ் கட்டணத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாது எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## பெண் ஊடகவியலாளருக்கு பாலியல் துன்புறுத்தல்

### விசாரணை ஆரம்பம்– அமைச்சர் பந்துல

பெண் ஊடகவியலாளர் ஒருவரை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஐடிஎன் அதிகாரிக்கு எதிராக உத்தியோகபூர்வ விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன வின் உத்தரவின் பேரில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன.

உள்ளக மற்றும் அமைச்சரவை மட்டத்திலான விசாரணைகளிற்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ள பந்துல குணவர்த்தன தான் துன்புறுத்தல்களிற்குள்ளானதாக குறிப்பிட்ட பெண் ஊடகவியலாளர் சமூக ஊடகங்களில் பதிவு செய்துள்ள போதிலும் அவர் உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டுகள் எவற்றையும் பதிவு செய்யவில்லை இருந்தபோதிலும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை எந்த முறைப்பாடும் எனக்கு கிடைக்கவில்லை. ஊடக அமைச்சின் செயலாளருக்கோ அல்லது ஐடிஎன் நிர்வாகத்திற்கோ இதுவரை எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் எனினும் பெண் செய்தி வாசிப்பாளர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஊடக அமைச்சின் செயலாளரையும் ஐடிஎன் நிர்வாகத்தையும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு தொகுப்பு- I



**01**

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### மீன்பிடி வரலாறு

காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் எழுதிய "கடலக மீன்பிடியியல்" என்னும் நூலில் மீன்பிடிவரலாற்றில் ஒரு நோக்கு என்ற பகுதியில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

மீன்பிடித்தொழில் எப்போது ஆரம்பித்தது என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவோமானால் அதற்கு விடை காண முடியாது. ஏனெனில் சமயப்பிரசித்திபெற்ற நூலான பைபிளில் கிறிஸ்து வலைவீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த தன் சீடர்களாக்கி கொண்டதாக காணப்படுகின்றது.

அதற்கும் மேலாக நோக்கினால் பல யுகங்களுக்கு முன் சைவசமயச் சம்பவங்களில் முருகப்பெருமான் சுறா வடிவம் கொண்டு கடலிலே பல அட்டகாசங்கள் புரிந்ததாகவும் அவரது தந்தை சிவன் மீனவ வேடம் பூண்டு வலைவீசி அச் சுறாவை கரை சேர்த்ததாகவும் கூறப்படுகிறது. ஆகவே மீன்பிடி தொடங்கியதையிட்டு நம் நாட்டில் மீன்பிடி எப்படி ஆரம்பித்தது என்பதைப் பார்த்தால் எதுவித சான்றுகளும் இருப்பதாகப்படவில்லை. மாறாக நம் முன்னோர் மூதாதையரின் வாய்ச் சொல்லின் மூலம் சில தகவல்கள் கூறக்கூடியதாக உள்ளது.

**காலஞ்சென்ற முன் னாள் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் எழுதிய "கடலக மீன்பிடியியல்" என்னும் நூலிலிருந்து சில விடயங்கள் இக் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன**

இலங்கையைப் பொறுத்த வரையிலும் புராதன காலந் தொட்டே எமது வாழ்க்கையுடன் மீன்பிடித் தொழில் நடவடிக்கை களும் இணைந்தவாறே விளங்கியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. வசப அரசன் காலத்து பெரிய குளக் கல்வெட்டில் மீன்பிடித்தொழில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிரிந்தையில் வந்திறங்கிய விகாரமகாதேவியை காபந்திஸ்ஸ அரசனிடம் மீனவர் ஒருவரே கூட்டிச் சென்றதாக சிங்கள வம்சக் கதைகளில் கூறப்படுகிறது. முற்காலத்தில் அரசனுக்குத் திறையாக முத்து அனுப்பப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. இவையெல்லாம் புராதன காலந்தொட்டே உள்நாட்டு மீன்பிடித்தொழில் இலங்கையில் நடைபெற்று வந்துள்ளதைக் காட்டுகின்றன.

மீன்பிடியில் முதல் முதல் ஈடுபட்டவர்கள் தங்கள் கைகளில் தடிகளை எடுத்துச் சென்று கண்ணுக்குப் பட்ட மீன்களை அடித்தே பிடித்தார்கள். அந்த அளவுக்கு கரைகளில் மீன்கள் தாராளமாக காணப்பட்டன. நாளடைவில் தடிகளைக் கூராக்கி மீன்களை நோக்கி குறிதவறாமல் எறிந்து மீன்பிடித்தனர். வேட்டைத் தொழிலாக மீன்பிடி செய்தவர்கள் அதில் சில மாற்றங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். பொறிகள் அமைத்து மீன்பிடிக்க எண்ணி, கரையிலிருந்து சிறிது தூரம் வரை பன்னமட்டைகளால் வேலி போன்று அமைத்து அதன் இடைகளில் ஈச்சம் கம்புகளான கூடுகளை இணைத்து மீன்பிடியில் சில முன்னேற்றம் கண்டார்கள். காலப் போக்கில் ஈச்சம் கம்புகளால் ஆன தனித்தனி கூடுகளை அமைத்து மீன்பிடியை பெருக்கிக் கொண்டார்கள். வேலி போன்று பனை மட்டைகளைக் கொண்டு அமைத்ததை கண்டி என்றும், ஈச்சம் கம்புகளில் ஆன கூடுகளை பறிக்கூடு என்றும் அழைத்தனர்.

**மீன்பிடியில் முதல் முதல் ஈடுபட்டவர்கள் தங்கள் கைகளில் தடிகளை எடுத்துச் சென்று கண்ணுக்குப் பட்ட மீன்களை அடித்தே பிடித்தார்கள். அந்த அளவுக்கு கரைகளில் மீன்கள் தாராளமாக காணப்பட்டன.**

இன்றும் வட-கிழக்கூடாகக் கடல்களில் கண்டிகளையும் தீவகங்களில் பறிக்கூடுகளை தொழிலாகச் செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்படியான காலகட்டத்தில் கடலில் சிறிது தூரம் சென்று மீன்பிடிக்கும் எண்ணம் கொண்டு இரண்டு மரங்களை இணைத்து அதில் ஏறி கைகளால் வலித்துச் சென்று பறிக்கூடுவைத்து மீன்பிடிக்கலானார்கள். தாங்கள் பயன்படுத்தும் மரங்களுக்குப் பெரும்பாலும் முதலில் முள்முருக்கம் மரத்தையே பயன்படுத்தினர். இரண்டு மரங்களை இணைத்து மீன்பிடியை மேற்கொண்டதனால் கட்டுமரம் என அழைத்தனர். இன்றும் அதே பெயர் கொண்டே அழைக்கிறோம்.

**முன்னோர்கள் இரண்டு மரங்களை இணைத்து மீன்பிடியை மேற்கொண்டதனால் கட்டுமரம் என அழைத்தனர். கட்டுமரம் கட்டுவதற்கு பெரும்பாலும் முதலில் முள்முருக்கம் மரத்தையே பயன்படுத்தினர்**

கைகளால் வலித்து கட்டு மரத்தை செலுத்தியவர்கள் தடிகளைக் கொண்டு வலித்தும், நீண்ட தடிகளைக் கொண்டு ஊன்றியும் செல்லப் பழகிக் கொண்டனர். வலித்தோ ஊன்றியோ இலகுவாகச் செல்ல வேண்டும் எண்ணம் ஏற்படவே, கடலின் அலைகளில் ஏறிச் செல்லக் கூடியதாக கட்டுமரத்திற்கோர் வடிவம் கொடுத்து முற்பக்கத்தை உயரமாக அமைத்ததுமல்லாமல் முருங்கைமரத்தினாலான கட்டுமரம் நீண்ட நேரம் தண்ணீரில் மிதந்து நிற்காததைக் கண்ணுற்று மலைவேம்பு (அல்பீசியா) மரத்தை தெரிந்தெடுத்து பாவிக்கத் தொடங்கினார்கள். இன்றும் கட்டுமரங்கள் மலைவேம்பிலேயே செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

இரண்டு மரங்களை இணைத்து மீன்பிடிக்கச் சென்றவர்கள் கூட்டாகச் சென்று மீன்பிடிப்பதற்காக அதாவது இருவரோ மூவரோ கூட்டாகச் செல்லக் கூடியதாக இன்னும் சில மரங்களை இணைத்து கட்டு மரங்களை பெரிதாக்கி கொண்டார்கள். இன்று பார்வனையில் உள்ள கட்டுமரங்கள் மூன்று அல்லது ஐந்து மரங்களை கொண்டவையாக இருக்கின்றன.

அல்லாமலும் வலித்தும் தடியூன்றியும் மீன்பிடிக்கச் சென்றவர்கள் காற்றின் அசைவுகளை புரிந்து அதற்கேற்ப பாய்களை அமைத்து மேலும் சிறிது தூரம் கடலில் சென்று மீன்பிடிப்பதில் ஈடுபட்டனர். அது மட்டுமல்ல கடலில் நீரோட்டம், வற்று, பெருக்கு என்பவற்றையும் இயற்கையின் அறிகுறிகளை வைத்து கணிப்பிடவும் பழகிக் கொண்டனர். கடல் நீரோட்டங்களையும் வற்றுவது, பெருகுவது என்பவற்றை சந்திரனின் உதயம் அஸ்தமனத்தை வைத்து சரியான முறையில் கணிப்பிட்டனர்.

**பகலில் மட்டும் மீன்பிடியை மேற்கோண்டவர்கள் இரவில் மீன்பிடிப்பதற்கு முற்பட்டனர். அதனால் பகலைவிட இரவில் அதிகமான மீன்கள் பிடிபடுவதை புரிந்து சிறப்பாக இரவிலும் மீன்பிடியை கூடுதலாகச்செய்தனர்.**

இரவில் மீன்பிடியை மேற்கொண்டவர்கள் குறிப்பிட்டபடி தாம் கரை சேர்வதற்கு வானில் தோன்றும் வெள்ளிகளை (நட்சத்திரங்களை) குறிப்பாக வைத்து செயற்பட்டனர். அவ் வெள்ளிகளைக் கொண்டே நேரத்தையும் கணிப்பிட்டனர். முக்கியமாக வானில் தோன்றும் [illegible]வெள்ளி, காலைவெள்ளி, [illegible]வெள்ளி.குருசுவெள்ளி, ஆறாம் மீன், வாடைமினுக்கம் போன்ற வெள்ளிகளை தம் திசை அறி கருவிகளாக பயன்படுத்தினர்.

மீன்பிடியில் படிப்படியாக முன்னேறியவர்கள் ஆழ்கடல் சென்று தூண்டில் போட்டு மீன்பிடிக்கும் முறையைக் கற்றுக் கொண்டனர். அதற்கு பயன்பாடாக நூற்றுக் கணக்கில் இரண்டு யார் இடைவெளிக்கு ஒன்றாக கயிற்றில் கட்டி சேறு காணப்படும் கடலில் போட்டு அதனில் (சங்குகளில்) குடியேறும் கணவாய்களைப் பிடித்து தூண்டிலுக்கு இரையாகப் பயன்படுத்தி பெருமளவு மீனைப்பிடித்தனர். இம் முறையை நீண்டகாலமாக பயன்படுத்தி வந்தனர்.

மேலும் மீன்பிடியில் முன்னேற்றம் அடைந்தவர்கள் தங்கள் கட்டுமரங்களை மிகப் பெரிதாக அமைத்து காலத்துக்குக்காலம் இடம்பெயர்ந்து மீனைப் பிடிக்கும் வழக்கத்தில் ஈடுபட்டனர். நம் வட-கிழக்குத் தீவுகள் அனைத்துக்கும் சென்று மீனைப் பிடித்தனர். வட கரையில் வாழும் மீன் பிடிப்பவர்கள் குறிப்பாக பருத்தித்துறை. பொலிகண்டி, மயிலிட்டி, ஊறணி, மாதகலில் உள்ள மீனவர்கள் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, கச்சதீவு, கற்கடதீவு போன்ற தீவுகளுக்குச் சென்று பல் மாதங்கள் தங்கி தென் மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் தங்கள் சொந்த இடங்களுக்கு வந்தனர்.

இம்முறை தற்போதும் கையாளப்படுகின்றதைக் காணலாம். இதேபோன்று வட-கிழக்குக் குடாக் கடலில் மீன்பிடித்தொழிலைச் செய்தவர்கள் பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இலுப்பக்கடவை போன்ற இடங்களுக்கு மீன்பிடிக்கச் சென்று வந்தனர். இத்தனைக்கும் கட்டுமரங்களையே பாவித்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதுகூட கட்டுமரங்களில் வெளியிணைப்பு இயந்திரத்தை இணைத்து மீன்பிடியில் ஈடுபடுவதை அநேக இடங்களில் காண முடிகின்றது.

மீன்பிடி நவீனமயமாக்கப்பட்டு இயந்திரங்கள் இணைக்கப்பட்ட பலரக மீன்பிடி கலங்கள் பாவனைக்கு தாராளமாக வந்துங்கூட, எம்மூதாதையரினால் வடிவமைக்கப்பட்ட கட்டுமரங்கள் இன்றும் பாவனையில் இருப்பது. இது வடிவமைத்தவர்களின் தொழில் நுட்பத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலமிக்க சக்தி...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்

பொரள்ளை கெம்பல் மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உரிய நேரத்தில் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுப்போம். உழைக்கும் மக்களின் தொழில் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம்.

அதிகாரத்துக்காக நான் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படவில்லை.தவறான தீர்மானங்களை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

நாடு என்ற ரீதியில் பாரிய சவால்களை எதிர்கொண்ட வேளையில் தான் ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்றேன்.

சவால்களை கண்டு, நானும் எனது தரப்பினரும் ஒருபோதும் பின்வாங்கவில்லை. பல்வேறு சவால்களில் இருந்து மீள்வதற்கு மக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சகல தொழிற்சங்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் தொழிற்சங்கத்தினரை தவறாக வழிநடத்துகிறார்கள். எம்மை திருடர், திருடர் என விமர்சிப்பவர்களின் பின்னணியை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

சவால்களை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு பலமுறை அழைப்பு விடுத்தோம். அப்போது எவரும் முன்வரவில்லை.

ஆனால் தற்போது கடுமையான எதிர்ப்புக்களை முன்வைக்கிறார்கள். அரசியல் செய்வதற்கு ஏதும் இல்லாத காரணத்தினால் பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை தற்போது கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

நாட்டின் தேசியத்தை இல்லாதொழிக்க ஆரம்ப காலத்தில் சர்வதேச சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டதற்கு பல விடயங்கள் சான்று பகிர்கின்றன.

மக்களுக்காக ஆட்சியை கைப்பற்றவும், மக்களுக்காக ஆட்சியை விட்டுக் கொடுக்கவும் அரசியல் வாதிகள் பழகிக் கொள்ள வேண்டும். பொய்யான விமர்சனங்கள் எழுந்தபோது மக்களுக்காக அதிகாரத்தை விட்டுக் கொடுத்தோம்.

மக்கள் தற்போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தேவையாயின் பலமிக்க சக்தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம் என்றார். (ம-7,9)

## இனப் பிரச்சினை...

நாட்டின் நீண்டகாலமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பு மூலம் தீர்வு காண இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இது மிகவும் முக்கியமானது.

அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய நியாயமான, புதிய போட்டித் தன்மையுள்ள மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தன்து முயற்சி அரசியலன்றி நாட்டின் பொருளாதாரத்தை சரியாக நிரவகித்து மக்கள்மீதான சுமையை குறைப்பதே என்றும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பலம் தனக்கு இருப்பதாகவும் அதற்காக ஒத்துழைக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட முடியும் என்ற நம்பிக்கையினால்தான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதி தனது மே தின உரையில் குறிப்பிட்டார். (ம-7,9)

## அல்லைப்பிட்டியில்...

அல்லைப்பிட்டியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

அல்லைப்பிட்டி ஊர்காவற்றுறை வீதி பழைய அலுமினியம் தொழிற்சாலைக்கு அண்மையாக குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் காரும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பகுதியை சேர்ந்த நவநீதராசா நிலக்சனா (வயது - 26) மற்றும் மானிப்பாய் பகுதியை சேர்ந்த கீதாரட்ணம் திவ்யா (வயது - 31) ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர்.

ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தது டன் மற்றொருவர் வைத்தியசாலை கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

காரில் பயணித்த வடமராட்சி புலோலியை சேர்ந்தவர்களான சிவசுப்பிரமணியம் சுதாகரன் மற்றும் கருணாமூர்த்தி விமலாதேவி ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,33)

## வடக்கில்...

களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடக்கு மற்றும் தென் மாகாணங்களிலும் அநுராதபுரம் மற்றும் பதுளை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் பல இடங்களில் கடுமையான மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் இடியுடன்கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்றுவீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-7,9)

## கொழு...

யினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## உழை...

பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பொரள்ளை கெம்பல் மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஆட்சியில் இருந்த போதும், எதிர்க்கட்சியில் இருந்த போதும் உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாத்துள்ளோம். வெற்றியை காட்டிலும், தோல்வியின் போது உழைக்கும் மக்கள் எமக்கு ஆதரவளித்துள்ளார்கள்.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

பாரிய போராட்டத்துக்கு மத்தியில் நாட்டில் தற்போது ஜனநாயகம் மற்றும் சட்டம், ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜன நாயகத்துக்கு அமையவே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

மே தினத்துக்கு பின்னர் புதிய இலக்கு நோக்கி அனைவரும் செயற்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். (ம-7,9)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் செல்வராசா இளங்கோவன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02.05.2023 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர். (C-6465) இங்ஙனம் - குடும்பத்தினர்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15400)
076 825 7716 (ஆகாஸ்)

ஊர்க் கோழிக் குஞ்சுகள்
1 மாத ஊர்க் குஞ்சுகளும்
காடைக் குஞ்சுகளும்
விற்பனைக்கு
(15433)
077 332 2433

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு
1 வீடியோ எடிட்டர்
2 செய்தி வாசிப்பாளர்
3 நிகழ்ச்சி தொகுப்பாளர்
தேவை 077 258 5392

சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டர் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(C-6460)
V2 TRAVELS 0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6460)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


IELTS - New Batch ஆரம்பம்
Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
(15419)
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

VILLAGE HOTEL
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
077 544 8503


# மரண அறிவித்தல்

## அருளானந்தம் ஆனந்தகுமார்

(வட மாகாண பேரவைச் செயலக
நிர்வாக உத்தியோகத்தர்)



யாழ்.அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் ஆனந்தகுமார் அவர்கள் 29.04.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - இரத்தினேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் பாலசிங்கம், ரோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அமுதாவின் அன்புக் கணவரும் அனுஜன், அர்ச்சிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமார் (கண்ணன் - அவுஸ்திரேலியா), பிரேமளாசாந்தி (ராதா - ஐக்கிய அமெரிக்கா), காயத்திரி சாந்தி (அகிலா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜசோதினி (சாந்தி - அவுஸ்திரேலியா), இந்திரன் (பிரான்ஸ்), வாகீசன் (பிரான்ஸ்), ரவிதரன், காலஞ்சென்ற ரவிநாதன் ( அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அபிஜன், சமிரா, ஆருஜன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் அஷ்வினி, பகலவன், அஷ்சியா, இந்துஷா, வினோத், அஸ்வினா ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்கு இன்று (02.05.2023) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் டச்சுறோட், கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (15431)

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு:- 077 815 5011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.